


## CHASக்கு தகுதி பெற, நீங்கள்:

- ☑ சிங்கப்பூர் குடிமகனாக இருக்க வேண்டும்
- ☑ 40 வயது அதற்கு மேலும் அல்லது உடற்குறை உள்ளவராக^ இருக்க வேண்டும் மற்றும்
- ☑ உங்களது மாத குடும்ப தலைக் கணக்கு வருவாய் $1,500க்கும் அதற்கு குறைவாக இருக்க வேண்டும அல்லது எந்த வருமானமும் இல்லாத குடும்பங்கள் $13,000 மற்றும் அதற்கு குறைவான ஆண்டு மதிப்புடைய (AV)* ஒரு குடியிருப்பில் வசித்துக் கொண்டிருக்க வேண்டும்.

### மாத குடும்ப தலைக் கணக்கு வருவாய் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

மொத்தக் குடும்பத்தின் வருவாயும் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கப்படும்.

உதாரணமாக:

$$$ ÷ 4 நபர்கள் = $750

$3,000/மாதம் ÷ 4 நபர்கள் = $750

### யாரையெல்லாம் என்னுடைய குடும்பத்தினராக கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்?

தங்களுடைய NRIC(கள்) மற்றும்/அல்லது பிறப்புச் சான்றிதழ்(களில்) குறிப்பிட்டுள்ளவாறு ஒரே வீட்டு முகவரியில் வசிக்கின்ற அனைத்து (இரத்த சம்மந்தம் அல்லது திருமணம் மூலமாக) தொடர்புடைய குடும்ப உறுப்பினர்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

^ ஆறு செயல்களில் ஒன்றை சுயமாக செய்ய இயலாதவர்கள்: கழுவுதல்/குளித்தல், கழிவறைக்குச் செல்லுதல், இடம் பெயர்தல், உணவு உண்ணுதல், உடை அணிதல் மற்றும/அல்லது நடமாடுதல்.

* AV என்பது உங்கள் சொத்து வாடகைக்கு விடப்பட்டிருந்தால், அதன் உத்தேச ஆண்டு வாடகையாகும்.

விண்ணப்பப்பாரத்தை எந்தவொரு சமூக நிலையம், பொது மருத்துவமனை, அல்லது பலதுறை மருந்தகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **www.chas.sg** –யிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு விண்ணப்பப்பாரம் மட்டுமே போதுமானது. உங்களுடைய விண்ணப்பப்பாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், உங்கள் குடும்பத்திலுள்ள அனைத்து தகுதியான உறுப்பினர்களும் சுகாதார உதவி அட்டை ஒன்றைப் பெறுவார்கள்.

உங்களுடைய அட்டையை நீங்கள் பெற்றுக்கொண்ட உடன், அதை நீங்கள் பங்கேற்கின்ற ஒரு மருந்தகத்திற்கு உங்களுடைய அடுத்த வருகையின் போது உங்களுடைய அடையாள அட்டையுடன் சேர்த்து எடுத்து வந்தால் போதுமானது. CHAS மருந்தகங்களில் CHAS ஒட்டுவில்லை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் அவற்றை சுலபமாக அடையாளம் கண்டறியலாம்.




மேலும் அதிகத் தகவல்களுக்கு,
**1800-275-2427**
**(1800-ASK-CHAS)**
அழைக்கவும் அல்லது
**www.chas.sg**
பார்வையிடவும்.

aic agency for integrated care

MINISTRY OF HEALTH
SINGAPORE




CHAS










தங்களுடைய வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பங்கேற்கின்ற பொது மருத்துவர்கள் (GPs) மற்றும் பல்மருத்துவமனைகளில் செய்துகொள்ளும் சிகிச்சைக்காக நடுத்தர மற்றும் குறைவான வருமானம் ஈட்டுகின்ற சிங்கப்பூரர்கள் மானியங்கள் பெறுவதற்கு சமூக சுகாதார உதவித் திட்டம் (CHAS) வழிவகுக்கிறது.

## நீங்கள் எவ்வாறு CHAS –யிடமிருந்து நன்மை பெறலாம்?

### ☑ கட்டணம் மிகவும் குறைவானது

- பங்கேற்கும் மருந்தகங்களில் மானியங்களைப் பெற்று மகிழ்ந்திடுங்கள்

### ☑ மிகவும் வசதியானது

- உங்களுக்கு அருகாமையிலுள்ள பங்கேற்கும் மருந்தகத்திற்கு வருகை புரிந்திடுங்கள்

### ☑ உங்களுடைய நாள்பட்ட நோய் நிலைமைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து குணப்படுத்திடுங்கள்

- ஒரு குடும்ப மருத்துவரைக் கொண்டு உங்கள் உடல்நலத்தை நிர்வகித்திடுங்கள்

### ☑ நாள்பட்ட நோய் நிர்வாகத் திட்டத்தை (CDMP) நிறைவு செய்திடுங்கள்

- பங்கேற்கும் மருந்தகங்களில் நாள்பட்ட நோய் நிலைகளின் சிகிச்சைக்காக மெடிசேவை பயன்படுத்துங்கள்

| பொதுவான சுகவீனங்கள்# | நாள்பட்ட நோய் நிலைமைகள் | பல்மருத்துவச் சேவைகள் |
|---|---|---|
| வயிற்று வலி | ஆஸ்துமா | மழுங்கச் செய்தல் |
| இருமல், ஜலதோசம், சளிக்காய்ச்சல் | இருமுனை (பைபோலார்) சீர்குலைவு | செயற்கைப் பல் பொருத்துதல் |
| வயிற்றுப் போக்கு | நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (சிஓபிடி) | வேர்ப் பாதை |
| காய்ச்சல் | முதுமை மறதி நோய் | அடைத்தல்# |
| தலைவலி | நீரிழிவு நோய் | சுரண்டல், நோய்த்தொற்றிய தாங்குகுழி# |
| தசை, எலும்பு மற்றும் மூட்டு வலிகள் | உயர் இரத்த அழுத்தம் | பொருத்தப்பட்ட செயற்கைப் பற்களை சீராக்குதல்# |
| சருமத்தில் நோய்த்தொற்று மற்றும் சினப்புகள் | லிப்பிட் சீர்குலைவுகள் எ.கா. உயர் இரத்தக் கொழுப்பு | பல் பிடுங்குதல்# |
| கண் எரிச்சல் | மிகை மனவழுத்தம் | நிரப்புதல்# |
| சிறுநீர்ப் பாதையில் நோய்த்தொற்று | பேதப் பித்து | பாலிஷ் செய்தல்# |
| | பக்கவாதம் | செதில் நீக்குதல்# |
| | | ப்ளோரைடு மேற்பூச்சு# |



# இவற்றுக்குப் பொருந்தாது

மொத்தம் இரண்டு வகையான சுகாதார உதவி அட்டைகள் உள்ளன:

|   |   |
|---|---|
| $900 மற்றும் அதற்கு குறைவான மாத குடும்ப தலைக் கணக்கு வருவாயைக் கொண்டிருப்பவர்களுக்கானது **அல்லது** எந்த வருமானமும் இல்லாமல் $13,000 மற்றும் அதற்கு குறைவான ஆண்டு மதிப்பு கொண்ட ஒரு குடியிருப்பில் வசிப்பவர்களுக்கானது | $900 மேல் மற்றும் $1,500க்கும் குறைவான அல்லது இடையிலான மாத குடும்ப தலைக் கணக்கு வருவாயைக் கொண்டிருப்பவர்களுக்கானது |
| **பொதுவான சுகவீனங்களுக்கான மானியங்கள்** | |
| ஒரு வருகைக்கு $18.50 வரை | **பொருந்தாது** |
| **நாள்பட்ட நோய்நிலைமைகளுக்கான மானியங்கள்** | |
| ஒரு வருகைக்கு $80 வரை மற்றும் ஒரு வருடத்திற்கு $480 வரை | ஒரு வருகைக்கு $50 வரை மற்றும் ஒரு வருடத்திற்கு $300 வரை |
| **பல்மருத்துவச் சேவைகளுக்கான மானியங்கள்** | |
| ஒரு செயல்முறைக்கு ஒரு வருடத்திற்கு $256.50 வரை | குறிப்பிட்ட செயல்முறைகளுக்காக ஒரு செயல்முறைக்கு ஒரு வருடத்திற்கு $170.50 வரை |

மருந்தகம் உங்களுக்கு விதிக்கின்ற கட்டணங்களின் அடிப்படையில், நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணம் = மொத்த மருத்துவக் கட்டணம் - மானியங்கள்